**மின்னஞ்சல்/சுற்றறிக்கை**

திருப்பத்தூர் மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண்: 03189/ஆ4/2021 நாள்: 04.04.2022

பொருள்: தேர்வுகள் – திருப்பத்தூர் மாவட்டம் – பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வுகள் மே 2022 – செய்முறைத் தேர்வுகள் நடத்த வேண்டிய நாட்கள் மற்றும் அறிவுரைகள் – அனைத்து வகை உயர்/மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள் முதல்வர்களுக்கு தெரிவித்தல் – சார்பாக.

பார்வை: சென்னை-6, அரசுத்தேர்வுகள் இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்: 020958/பி1/2021 நாள்: 01.04.2022.

********

பார்வையில் காணும் அரசுத்தேர்வுகள் இயக்குநர் அவர்களின் செயல்முறைகளில் தெரிவித்துள்ள மே 2022, பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வெழுதவுள்ள பள்ளி மாணவர்களுக்கான செய்முறை தேர்வுகள் நடத்தப்பட வேண்டிய நாட்கள் மற்றும் அறிவுரைகள் திருப்பத்தூர் மாவட்ட அனைத்து வகை அரசு/நிதியுதவி/சுயநிதி/மெட்ரிக் உயர்/மேல்நிலைப்பள்ளித் தலைமை ஆசிரியர்கள் / முதல்வர்களுக்கு தொடர் நடவடிக்கையின் பொருட்டு இத்துடன் இணைத்து அனுப்பலாகிறது. மேலும் கீழ்கண்டவாறு செய்முறை தேர்வுகள் நடத்துவதற்கான கால அட்டவணையின்படி செயல்பட தொடர் நடவடிக்கை மேற்கொள்ள அனைத்து வகை உயர்/ மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள் மற்றும் முதல்வர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**<u>பத்தாம் வகுப்புப் பொதுத்தேர்வுகள் மே 2022</u>**

**<u>செய்முறை தேர்வுகளை நடத்துதல் தொடர்பான கால அட்டவணை</u>**

| வ எண் | பணி | பணியினை மேற்கொள்ள வேண்டிய நாட்கள் |
|---|---|---|
| 1 | பள்ளித்தலைமை ஆசிரியர்கள் / முதல்வர்கள் பள்ளி மாணாக்கருக்கான செய்முறைத்தேர்வு மதிப்பெண்களை பதிவு செய்வதற்கான வெற்று மதிப்பெண் பட்டியலை இணையதளம் வாயிலாக பதிவிறக்கம் செய்து கொள்ளுதல் | 11.04.2022 முதல் 29.04.2022 வரை |
| 2 | செய்முறைத் தேர்வுகள் நடத்துதல் | 25.04.2022 முதல் 02.05.2022 வரை |
| 3 | பள்ளித்தலைமை ஆசிரியர்கள் / முதல்வர்கள் உரிய ஆவணங்களுடன் செய்முறைத் தேர்விற்கான மதிப்பெண் பட்டியலை மாவட்டக் கல்வி அலுவலகத்தில் ஒப்படைத்தல் | 03.05.2022-க்குள் |

இணைப்பு : பார்வையில் காணும் செயல்முறைகள் ஒம்/- 04.04.2022.

முதன்மைக்கல்வி அலுவலர்,
திருப்பத்தூர்

பெறுநர் அனைத்து வகை அரசு/நிதியுதவி/சுயநிதி/மெட்ரிக் உயர்/மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்கள்/முதல்வர்கள், திருப்பத்தூர் மாவட்டம்.

நகல் மாவட்டக்கல்வி அலுவலர், திருப்பத்தூர்/ வாணியம்பாடி - தொடர் நடவடிக்கையின் பொருட்டு அனுப்பலாகிறது.